இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 77 ஆம் இலக்க, ஜே. ஆர். ஜயவர்த்தன நிலையச் சட்டம்

---

[1988, திசெம்பர் மாதம் 18 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1988, திசெம்பர் மாதம் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

விலை : சதம் 60 தபாற் செலவு : சதம் 75

## 1988 ஆம் ஆண்டின் 77 ஆம் இலக்க, ஜே. ஆர். ஜயவர்த்தன நிலையச் சட்டம்

[1988, திசெம்பர் மாதம் 18 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஓ. 35/88

**"வரலாற்று ஆராய்ச்சி, புராதனச் சுவடி, நூலக ஜே. ஆர். ஜயவர்த்தன நிலையம்" என அழைக்கப்படும் சுவடிக்கூடஞ்சார் வைப்பகமொன்றைத் தாபிப்பதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடுசெய்வதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

*சுருக்கப்பெயர்.*

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 77 ஆம் இலக்க, ஜே. ஆர். ஜயவர்த்தன நிலையச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*ஜே. ஆர். ஜயவர்த்தன நிலையத்தைத் தாபித்தல்.*

2. (1) இதனகத்துப்பின்னர் "நிலையம்" எனக் குறிப்பிடுசெய்யப்படும் வரலாற்று ஆராய்ச்சி, புராதனச்சுவடி, நூலக ஜே. ஆர். ஜயவர்த்தன நிலையம் என அழைக்கப்படவேண்டிய வைப்பகமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிலையமானது, 1988 பெப்புருவரி 8 ஆம் தேதிய, 5761 ஆம் இலக்க, உறுதியின்மூலம் மக்கள் சீனக் குடியரசிடமிருந்து இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசினால் கொள்வனவுசெய்யப்பட்டதும், கொழும்பிலுள்ள சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான என். சம்பந்தன் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்தினுள்ளும் மாவட்டத்தினுள்ளும் (36 ஆம் இலக்க) கறுவாத் தோட்டவட்டாரத்தில் (இப்பொழுது தர்மபால மாவத்தை எனவழைக்கப்படும்) ஏறு வீதியில் அமைந்துள்ள, தர்மபால மாவத்தை 191/1—5, 1/1 அத்துடன் 1/2 என்னும் வரிமதிப்பீட்டிலக்கங்களைக்கொண்ட வளவுகளில் அமைந்திருத்தல் வேண்டும்;

(3) நிலையத்துக்காகப் பயன்படுத்தப்படுவதற்கென இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் இருக்கும் எல்லாப் பணங்களும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து 9 ஆம் பிரிவினால் தாபிக்கப்படும் நிதியத்துக்குக் கைமாற்றப்பட்டதாதல் வேண்டுமென்பதுடன், நிலையத்தின் பேணுகைக்காகவும் அதன் வசதிகளை அதிகரிப்பதற்காகவும் பயன்படுத்தப்படலாம். படலாம்.

(4) நிலையமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன், இடையறுவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும் உடையதாதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

*நிலையத்தின் ஆளுநர் சபை.*

3. (1) நிலையத்தின் நிருவாகமும், முகாமையும் கட்டுப்பாடும் இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அமைக்கப்பட்ட ஆளுநர் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) நிலையத்தின் நிருவாக, முகாமைச் செலவுத் தொகையானது, தேசியச் சுவடிக்கூடத் திணைக்களத்தின் வாக்குகளின்கீழ் ஆண்டுதோறும் செய்யப்படவேண்டிய ஏற்பாட்டின்மூலம் திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிலையத்தின் ஆளுநர் சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(அ) குடியரசின் சனாதிபதி;

(ஆ) உயிரோடிருக்கும் எல்லாக் கடந்தகால சனாதிபதிகளும்;

(இ) பிரதம அமைச்சர்;

(ஈ) சபாநாயகர்;

(உ) எதிர்க்கட்சித்தலைவர்;

(ஊ) சனாதிபதியின் செயலாளர்;

(எ) பகிரங்க நம்பிக்கைப்பொறுப்பாளர்;

(ஏ) தேசியச் சுவடிக்கூடப் பணிப்பாளர்; அத்துடன்

(ஐ) சனாதிபதியினால் நியமிக்கப்படும் வேறு இரு உறுப்பினர்கள்; அவர்களுள் ஒவ்வொருவரும் (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, சனாதிபதியினால் அவருக்கு வழங்கப்படும் நியமனக்கடிதத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிகளுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(4) சனாதிபதி அவரது தற்துணிபின்படி, (3) ஆம் உட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியின்கீழ் அவரினால் நியமிக்கப்படும் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தை நீக்கலாம்.

(5) மூன்றும் உட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் சபையுறுப்பினர் எவரும், சனாதிபதிக்கு அதற்கென முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின்மூலம் எந்நேரத்திலேனும் சபையிலிருந்து விலகலாம்.

(6) சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பிலுமான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(7) சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருக்கின்றமை காரணமாக மட்டும், அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றமை காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

(8) சனாதிபதியானவர் சபைத்தவிசாளராக இருத்தல் வேண்டும்.

சபையின் தத்துவங்கள்.

4. (1) சபையானது நிலையத்தின் பெயரில் பின்வருவனவற்றைச் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்:—

(அ) இலங்கையின் முதலாவது தேர்ந்தெடுக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியான அதியுத்தமராம் ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களின் (1978—88) பதவிக்காலம் முடிவுறுவதன் மேல், 1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, தேசியச் சுவடிக்கூடச்

சட்டத்தின் 9அ என்னும் பிரிவின்கீழ் தேசிய சுவடிக்கூடத்துக்குக் கைமாற்றப்பட்ட எல்லாப் பகிரங்கப் பதிவேடுகளையும் அச்சிடப்பட்ட புத்தகங்களையும் வைத்திருத்தல் ;

(ஆ) புத்தகங்கள், பத்திரங்கள், கோப்புகள், நிழற்படங்கள், இயக்கப்படச் சுருள்களும் தட்டுகளும், கட்புலநாடா, வீடியோ நாடாப் பதிவுகள், சொல்லப்பட்ட ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களின் குடும்ப மரபாய் வரும் பொருட்கள், பிள்ளைப்பராய மற்றும் வாலிப்பபராய நினைவுச் சின்னங்கள் என்பவற்றையும், தனிப்பட்ட அக்கறை காரணமாக அவரினால் உருவாக்கப்பட்டுச் சேகரிக்கப்பட்ட பொருட்கள், தேர்தல் பிரசாரங்கள் தொடர்பான நினைவுச்சின்னங்கள், அலுவலக முறையான படங்களும் அளிப்புகளும், அவரினால் பெறப்பட்ட பதக்கங்களும் கொடைகளும் என்பவற்றையும் வைப்பலிடுவதற்காக ஏற்றுக்கொள்ளுதல் ;

(இ) அரசியற் கட்சி கூட்டுறுப்பினர்கள், குடும்ப நண்பர்கள், தனிப்பட்ட நண்பர்கள், அத்துடன் ஏனையோர் என்போரால் நன்கொடையளிக்கப்பட்டவையும், சொல்லப்பட்ட ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் தொடர்பானவையுமான பொருட்களை வைப்பிலிடுவதற்காக ஏற்றுக்கொள்ளுதல் ;

(ஈ) பந்திகள் (அ), (ஆ), (இ) என்பவற்றில் குறிப்பிடுசெய்யப்பட்ட பொருட்களைப் பாதுகாப்பதற்கும் பேணிக்காப்பதற்கும் அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் ;

(உ) அத்தகைய பொருட்கள் பற்றிய உசாத்துணைச் சேவையை ஏற்பாடு செய்தல் ;

(ஊ) அத்தகைய பொருட்களின் கண்காட்சிகளை நடாத்துதல் ;

(எ) புலமைசார் கூட்டங்களை நடாத்துதல் ;

(ஏ) வாய்மூல வரலாற்று நிகழ்ச்சிகளை நடாத்துதல் ;

(ஐ) நிலையத்தைப் பேணும், தொழிற்படுத்தும், பாதுகாக்கும் அல்லது சீராக்கும் நோக்கத்துக்காக, பணத்தின் அல்லது வேறு ஆதனத்தின் நன்கொடைகளை, கொடைகளை அத்துடன் மரணசாதனக் கையளிப்புகளைப் பரிந்து கேட்டலும், ஏற்றுக்கொள்ளுதலும் ;

(ஒ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல் அல்லது முகாமைசெய்தல் ;

(ஓ) சபையானது, எந்த அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்துக்கு உரித்தாக வரக்கூடுமோ அந்த அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமாகவுள்ளவையும், (அ), (ஆ), (இ) என்னும் பந்தி

களில் விவரிக்கப்பட்டவை அல்லாதவையுமான எவையேனும் ஆதனங்களை விற்பனை செய்தல், ஈடுவைத்தல், கொடுத்துமாற்றல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல் அல்லது கையாளுதல்

(ஔ) அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்து கொள்ளுதலும் புரிதலும் ;

(க) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் புரிதல்.

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திமூன்றும் ஆண்டின் 48 ஆம் இலக்க, தேசிய சுவடிக்கூடச் சட்டத்தின் 9அ என்னும் பிரிவின் (ஆ) என்னும் பந்தியிலுள்ளதெதுவும், (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) என்னும் பந்திகளில் குறிப்பிடுசெய்யப்பட்ட பொருட்கள் தொடர்பில் ஏற்புடையதாதலாகாது.

நிலையத்தின் பணங்களை முதலீடு செய்தல்.

5. நிலையத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்கள், சபையானது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் சபையினால் முதலீடு செய்யப்படலாம்.

நிலையத்தின் பணியாட்டொகுதி.

6. சபையானது பின்வரும் தத்துவங்களையுடையதாதல் வேண்டும் :—

(அ) நிலையத்தின் குறிப்பிட்ட கருத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான நிலையத்தின் அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல் ; அத்துடன்

(ஆ) அவ்வாறு நியமிக்கப்படும் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் செலுத்தப்படற்பாலதான ஊதியத்தைத் தீர்மானித்தல்.

கணக்காய்வு.

7. (1) நிலையத்தின் வருமானமும் செலவினமும் பற்றி முறையான கணக்குகள் வைத்திருக்கப்படுவதனைச் சபை செய்வித்தல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை நிலையத்தின் கணக்குகளினது கணக்காய்வுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

ஆண்டறிக்கை.

8. சபையானது, ஒவ்வோராண்டும் திசெம்பர் முப்பத்தோராம் நாளுக்குப்பின்னர் செயல்முறைக்குகந்தவரை விரைவாக, அவ்வாண்டின்போது நிலையத்தின் அலுவல்களினது நிருவாகம் பற்றிய ஓர் அறிக்கையையும் அவ்வாண்டின்போது நிலையத்தின் வருமானம், செலவினம் பற்றியதும் நிலையத்துக்குச் சொந்தமான பணங்களின் முதலீடு பற்றியதுமான கூற்றையும் தயாரித்தல் வேண்டும். சபையானது அத்தகைய அறிக்கையையும் கூற்றையும் அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும்; அவர் அவற்றைப் பாராளுமன்றத்தின்முன்னர் இடுவித்தல் வேண்டும்.

9. (1) நிலையமானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். நிலையத்தின் நிதியம்.

(2) பின்வருவன அத்தகைய நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) நிலையத்தின் நோக்கங்களுக்காக ஆண்டுதோறும் ஒதுக்கீடுசெய்யப்படும் எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) நன்கொடைகளாக அதனால் பெறப்படும் எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(இ) அதனால் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்தான வருமானமாக அதனால் பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்.

(ஈ) பிரிவு 2(3) இல் நடைமுறை காரணமாக நிதியத்துக்குக் கைமாற்றப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும்.

(3) சபையானது அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும் அதன் பணிகளை நிறைவேற்றுகையிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவையான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

10. சபையானது அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தல், நிறைவேற்றுதல் அத்துடன் புரிதல் என்பனவற்றுடன் சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான ஏதேனும் கருமம் தொடர்பாக அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய விதிகளை ஆக்கலாம். விதிகள்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 177 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.